# சபாக் பெர்ணம் மாவட்டத்தில்

# தேசிய புள்ளிவிவர தினம்

# மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது




**டில்லிராணி முத்து**

சபாக் பெர்ணம், அக். 21-

சபாக் பெர்ணம் மாவட்டத்திலுள்ள சுங்கை பெசார் அரங்கில் நேற்றுக் காலை 9.00 மணி தொடங்கி தேசிய புள்ளிவிவர தினக் கொண்டாட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

நாட்டின் பொருளாதாரத்துறை அமைச்சர் ரஃபிஸி ரம்லி தவிர்க்க முடியாத சில காரணங்களால் இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாத நிலையில் அவரின் பிரதிநிதியாக பொருளாதாரத்துறை அமைச்சின் தலைமைச் செயலாளர் டத்தோ நோர் அஸ்மி பின் டிரோன் இந்த தேசிய புள்ளிவிவர தினக் கொண்டாட்டத்தை அதிகாரப்பூர்வமாகத் தொடக்கி வைத்தார்.

மலேசியர்களிடையே தத்தம் வாழ்வியலில் புள்ளிவிவரக் கணக்கெடுப்பு எத்தகைய முக்கிய அம்சத்தைக் கொண்டுள்ளது என்பதைத் தெளிவுபடுத்தவும் அதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும்தான் ஒவ்வோர் ஆண்டும் தேசிய நிலையில் நாம் புள்ளிவிவர தினத்தைக் கொண்டாடுகிறோம் என பொருளாதாரத்துறை அமைச்சின் தலைமைச் செயலாளர் டத்தோ நோர் அஸ்மி தமது சிறப்புரையில் குறிப்பிட்டார்.

அதேவேளையில், மக்களிடையே உள்ள தனித்துவத்தையும் கலைசார்ந்த புள்ளிவிவர நிலைப்பாடும் தன்மையும் எத்தகைய நிலையில் அமைந்துள்ளது என்பதையும் மக்களே நேரடியாக உணரவும் இத்தகைய நிகழ்வுகள் வழிசெய்வதாகவும் நம்பப்படுகிறது என அவர் கூறினார்.

ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்படும் தேசிய நிலையிலான புள்ளிவிவர தினம் யுனெஸ்கோவின் நிலைப்பாட்டுக்கு ஒப்ப அது நிர்ணயம் செய்துள்ள அக்டோபர் 20ஆம் நாள் அனுசரிக்கப்படுகிறது என்றார் அவர்.

கடந்த 2010ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோவால் இது அங்கீகரிக்கப்பட்டும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

அவ்வகையில், கடந்த 2017ஆம் ஆண்டு முதல் மலேசியா இந்த புள்ளிவிவர தினத்தைக் கொண்டாடி வருகிறது.



இது புள்ளிவிவர இலாகாவின் சேவையையும் அவர்களின் அர்ப்பணிப்பையும் உணர்த்தும் வகையிலும் அவர்களுக்கான அங்கீகாரத்தை நினைவுகூரும் வகையிலும் அமைந்துள்ளது.



இந்நிலைப்பாடு தொடரும் சூழலில் அது அதன் மேம்பாடு, நிலைத்தன்மை, சேவை உட்பட சட்டவரையறைகளையும் உருவாக்கும் களமாகவும் மாறும் என்பதில் ஐயமில்லை. இந்தப் புள்ளிவிவர தினம் அரசாங்கத்தின் வருடாந்திர ஒரு நிகழ்வாக மட்டுமே அமைந்திடாமல், அது மக்களின் நலன் சார்ந்ததாகவே அரசு வகைப்படுத்துகிறது என்று டத்தோ நோர் அஸ்மி குறிப்பிட்டார்.

ஏனெனில் புள்ளிவிவரத் தகவல் என்பது அனைவருக்குமானது. அது ஒவ்வொருவருக்கும் அவசியமானதும்கூட. மக்கள் புள்ளிவிவரத் தகவல்கள் மட்டுமன்றி கல்வியல், திட்ட வரைவு, சமூகவியல், இனம், மொழி, வாழ்வியல் என அனைத்து நிலையிலும் அது அவசியமானது என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.




மேலும் புள்ளிவிவரக் கணக்கெடுப்பு என்பது ஒரு துறை சார்ந்ததில்லை. அது ஒவ்வொருவருக்குமானது என்பதை நாம் முதலில் உணர்தல் வேண்டும். நமது பொருளாதாரம் தொடங்கி வாழ்வியல் மேம்பாடும் வளர்ச்சியும்கூட இந்தப் புள்ளிவிவரக் கணக்கெடுப்பில் அடங்கியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து இந்த புள்ளிவிவர தினக் கொண்டாட்டத்தில் அரங்கினுள் அமைக்கப்பட்டிருந்த பல்வேறு அரசு நிறுவனங்களின் கண்காட்சி முகப்பிடங்களையும் டத்தோ நோர் அஸ்மி நேரில் சென்று பார்வையிட்டார்.

மேலும் பொதுமக்களின் நலனில் அக்கறைகொள்ளும் வகையில் இங்கு முற்றிலும் இலவசமான முறையில் சுகாதார மருத்துவப் பரிசோதனையும் ஏற்பாடு செய்யப்படிருந்தது. மக்கள் பலரும் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு மருத்துவப் பரிசோதனையை மேற்கொண்டனர்.

அதோடு இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பொதுமக்கள், பல்வேறு அரசு நிறுவனங்களின் சாவடிகளிலிருந்து பயனுள்ள  தகவல்களைப் பெற்றுச் சென்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தத் தேசிய புள்ளிவிவர தினக் கொண்டாட்டத்தில் தேசிய புள்ளிவிவர இலாகாவின் தலைவர் டத்தோஸ்ரீ டாக்டர் முகமட் உஸிர் மஹிடின், மாநில அரசு நிறுவனங்களின் முதன்மை அதிகாரிகள், சபாக் பெர்ணம் மாவட்ட போலீஸ் தலைவர் சூப்பிரிண்டென்டன்ட் அகுஸ் சலிம் முகமட் அலியாஸ், அரசு நிறுவனங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டு சபாக் பெர்ணம் வாழ் சமூகத்தினரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Jumlah Penerbitan (sehingga 20 Oktober 2023) | Bulanan 173 | Suku Tahunan 55 | Tahunan 129 | Ad hoc 827 | Jumlah 1,184 |
| Jumlah Penerbitan mengikut Kategori | Ekonomi 240 | Sosial 908 | Umum 36 | Jumlah 1,184 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Jumlah Stats Alert (sehingga 20 Oktober 2023) | Bulanan 125 | Suku Tahunan 49 | Tahunan 43 | Ad hoc 6 | Jumlah 223 |
| Jumlah Penerbitan mengikut Kategori | Ekonomi 156 | Sosial 47 | Umum 20 | Jumlah 223 | |